(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(1).] **பாராளுமன்றம்**

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 நவம்பர் 13 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 நவம்பர் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கொழும்பு, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் 5 ஆம் தரத்தினதும் 6 ஆம் தரத்தினதும் ஒத்த வகுப்புகளின் எண்ணிக்கை, வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் —

(i) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தரம் 6 இற்கு சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில், புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தரம் 6 இற்கு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்பப் பிரிவிலிருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

51/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் முதலாவது கொவிட்-19 நோயாளி அடையாளம் காணப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்திகதி முதல் இன்று வரை நாளாந்தம் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்றியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அத்திகதி முதல் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். (PCR - Polymerase Chain Reaction) பரிசோதனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கொவிட்-19 நோயை தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

94/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலக நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உயிரியல் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல்வேறான அரசியல் மற்றும் வர்த்தக உத்திகளுக்காக இரகசியமாக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இலங்கை உட்பட குறை அபிவிருத்தி நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நாடுகளாக இலக்கு வைக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

116/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,—போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு டிப்போக்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) குருணாகல் மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் பேருந்து தொகுதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

121/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்குரியதாக இதுவரை கைச்சாத்திடப் பட்டுள்ள முதலீட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளில் இன்றளவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

126/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதான குளங்களில் ஒன்றான நஞ்சுண்டான் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கான கடந்த அரசாங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக பெய்துவந்த மழையின் காரணமாக குறிப்பிட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் ஒதுக்கமானது திருப்பியனுப்பப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) இக்குளத்தின் நீரைப் பெறுகின்ற பெருமளவிலான வயல்களும் மேட்டு நிலங்களும் காணப்படுவதோடு கிராமிய மக்கள் தமது வாழ்வாதாரத்தின் பொருட்டு இக்குளத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதையும்;

(iii) நஞ்சுண்டான் குளக்கட்டிலுள்ள அநாவசியமான மரங்களை வெட்டி அகற்றுவதற்கு மரக் கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் போக்குவரத்துக்கான வீதி சேதமடைந்துள்ளதனால் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி நஞ்சுண்டான் குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) போக்குவரத்துக்கான வீதி புனரமைக்கப்பட்டு, மேற்படி குளத்தின் புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

151/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 14, ஸ்ரீ சங்கபோதி மகா வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் கூரை பழுதடைந்து அதன் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்துள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக மாணவர்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

221/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி இலத்திரனியல் உபகரணங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து றக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 நவம்பர் 19, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 முதல் இதுவரையில் அழிக்கப்பட்டுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தொல்பொருள் தளங்களை அழித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவையென்பதையும்;

(vi) அழிக்கப்பட்டுள்ள, ஆனால் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அடையாளம் காணப்படாதுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) நாட்டின் வரலாற்று பெருமையை பாதுகாக்கும் தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

52/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை ஊழியர்களின் நலநோம்புகைக்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவர்களை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

99/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வில்பத்து தேசிய வனப்பூங்காவை முதன்மையாகக் கொண்ட வனப்போர்வை மனித செயற்பாடுகள் காரணமாக அழிவடைகிறது என்பதையும்;

(ii) வடமத்திய மாகாணம் ஏற்கனவே பகுதியளவில் பாலைவனமாக மாறியுள்ளது என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது இலங்கையின் ஒட்டுமொத்த காலநிலையினையும் பாதித்துள்ளது என்பதையும்;

(iv) ஆகையால், இலங்கையில் தொடர்ச்சியாக யாதேனும் ஒரு பிரதேசம் வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக புத்திஜீவிகள் குழுவொன்றின் வாயிலாக ஆய்வொன்றினை மேற்கொள்வது உகந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

117/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முகவரி, மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இக்காலத்தில் இவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் பிற சலுகைகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்த அவர்களது நிர்வாக காலத்தில் தவறிவிட்டனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

122/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தென்னை மரங்கள் அகற்றப்படும்போது அவை பெற்றுக் கொடுக்கப்பட்ட தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கெனப் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) தென்னை மரமொன்றுக்காக வழங்கப்பட்ட விலை எவ்வளவென்பதையும்;

(v) அதன் மூலம் ஈட்டப்பட்ட பணத்தொகையானது தற்போது எந்த நிறுவனத்தின் வசமுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

152/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு-14, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள புளூமென்டல் வித்தியாலயத்தில் சுமார் 400 மாணவர்கள் கல்வி கற்பதுடன், அங்கு கழிவகற்றல் முறைமை திருத்தப்படாததன் காரணமாக சாக்கடை மூடிக்குப் பதிலாக பலகைகளினால் மூடப்பட்டுள்ளததென்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களுக்கு முறையான மலசலகூட வசதிகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

222/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி மருந்துகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி மருந்துகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

307/2020

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் இருக்கின்ற இலங்கை அதிபர் சேவைக்குரிய அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் இன்றளவில் கடமையாற்றும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கண்டி மாவட்டத்தில் —

(i) அதிபர் சேவையில் தர நியமனத்தைப் பெற்றுள்ள போதும் தரத்திற்கு ஏற்புடைய அதிபர் நியமனம் கிடைக்காத அலுவலர்களின் எண்ணிக்கை;

(ii) அதிபர் சேவையில் தகைமை இல்லாத எனினும், தமிழ் மூல பாடசாலைகளில் அதிபர்களாக நியமனம் பெற்றுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை;

யாதென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி (ஆ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களின் விபரங்கள் மற்றும் இவர்கள் இன்றளவில் கடமையாற்றும் பாடசாலைகள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2020 நவம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

19/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப்படையானது 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரேடார் ரிசீவரொன்றையும் அன்டெனா ஸ்கேனரொன்றையும் திருத்துவதற்காக சீனாவுக்கு அனுப்பியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பொருட்கள் காணாமல் போயுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு பொறுப்பேற்றிருந்த கம்பனி யாது;

(ii) மேற்படி கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர்;

(iii) மேற்படி கம்பனியானது தற்போதும் இலங்கையில் ஏதேனுமோர் அரச நிறுவனத்துக்கு சேவை வழங்குகின்றதா;

(iv) மேற்படி பொருட்கள் காணாமற் போனமையால் ஏற்பட்டுள்ள நட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

65/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலையொன்றில் அதிபர் பதவியை வகிப்பதற்கு கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அதற்கமைவாக உரிய தகைமைகளைக் கொண்டுள்ள அதிபர்கள் பதவிவகிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு உரிய தகைமைகளை பூர்த்தி செய்திராத அதிபர்கள் பதவிவகிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அனைத்து தேசிய பாடசாலைகளுக்கும் உரிய தகைமைகளைக் கொண்ட அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

109/2020

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகளின் எண்ணிக்கை;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகளில் சில இலங்கையில் ஓட்டத்தில் ஈடுபடுத்த பொருத்தமற்றவை என்பதை அவர்அறிவாரா?

(இ) (i) ஆமெனின், புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகள் என்பவற்றை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான செயற்பாடு சார்பாக நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் புகையிரதப் பெட்டிகள் தயாரிப்பு ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அதன் பிரகாரம், அரசாங்கத்தினால் சேமித்துக்கொள்ளக்கூடிய தொகை எவ்வளவு;

என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

164/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் தொகைகள் வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கருத்திட்டங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி கடன் தொகைகளுக்கான தவணைப்பணம் செலுத்துவதற்காக அரசாங்கம் தயார் செய்துள்ள வேலைத்திட்டம் யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

223/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி சீமெந்து எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி சீமெந்தினை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சீமெந்தினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

435/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாளொன்றில் பெருமளவிலான வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வீதி விபத்துக்களின் மூலம் நாளொன்றில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக எத்தனை என்பதையும்;

(ii) 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் வீதி விபத்துக்களினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக இலங்கைப் பொலிஸிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வீதி விபத்துக்களைக் குறைத்தல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) குறித்த தெரிவுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் மற்றும் தீர்மானங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

448/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது நடைமுறையிலுள்ள மத்ரஸா பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து, மத்ரஸா பாடசாலைகள் தொடர்பில் சமூகத்தில் பெருமளவு பேசப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி மத்ரஸா பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளையும்;

(ii) இப்பாடசாலைகள் தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

456/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கலாவெவ நீர்த்தேக்கத்திலிருந்து திசாவெவ நீர்த்தேக்கம் வரை நீரை கொண்டுச் செல்லும் பழைய யோத கால்வாய் தூர்ந்து போயுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கால்வாயைச் சுத்திகரித்து இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு வேலைத்திட்டமொன்று உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் தொடங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2020 நவம்பர் 21, சனிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 08 ஆம் திகதிய 2118/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2020 நவம்பர் 25, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

18/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு புதிதாக 2200 பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பேருந்துகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி குத்தகை கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

107/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வினாகிரி உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கள்ளின் தரத்தினை ஒழுங்குபடுத்தலுக்கு முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இம்முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவாரா?

(ஆ) (i) வினாகிரி உற்பத்திக்கு செயற்கை கள்ளு பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்;

(ii) இரசாயன நச்சுப்பொருள் அடங்கிய மேற்படி செயற்கை கள்ளு பாவனை சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாகுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வினாகிரி உற்பத்திக்கு செயற்கை கள்ளு பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகளை குறிப்பிட முடியுமா என்பதையும்;

(ii) செயற்கை கள்ளினால் உற்பத்தி செய்யப்படும் வினாகிரி பாவனையால் ஏற்படக்கூடிய குறுகிய மற்றும் நீண்டகால நோய்கள், விளைவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

192/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1000 பாலங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தங்களின் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டதொரு நிகழ்ச்சித்திட்டம் என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் குறித்த பிரதேசத்தின் தேவைகளுக்குப் பொருத்தமானதாக இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் —

(i) வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணங்களுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலங்களை நிர்மாணிப்பதற்கான நிகழ்ச்சிக்குரிய திட்டவமைப்புகள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்குப் பொருத்தமானவையாக தயாரிக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) இன்றேல், வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட திட்டவமைப்புக்களுக்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இந்நிகழ்ச்சியின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்காக —

(i) நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை;

(ii) பணம் ஒதுக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை;

(iii) பணம் ஒதுக்கப்பட்ட பாலங்களில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை;

(iv) பணம் ஒதுக்கப்பட்ட பாலங்களில் வேலைகள் நிறைவுசெய்யப்படாத பாலங்களின் எண்ணிக்கை;

(v) மேலும் நிர்மாணிக்கவேண்டியுள்ள பாலங்களின் எண்ணிக்கை;

யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

218/2020

கௌரவ மொஹமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கௌப்பியின் அளவு;

(ii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை;

(iii) எந்த நாடுகளில் இருந்து கௌப்பி இறக்குமதி செய்யப்பட்டது;

(iv) கௌப்பி இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலங்கைக்கு கௌப்பி இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

342/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2 )

(அ) (i) 2018/05/11 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய கணக்காய்வு பரிசோதகர் சேவையின் II ஆம் தரத்திற்கு கணக்காய்வுப் பரிசோதகர் ஆட்சேர்ப்பு – 2018 இற்கான திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி போட்டிப் பரீட்சை 2018 அக்டோபர் மாதம் 14, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சில பரீட்சை நிலையங்களில் நடைபெற்றன என்பதையும்;

(iii) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு இதுவரை 2 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளை துரிதமாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறு பெறுபேறுகளை வெளியிட்ட பின்னர் தகைமை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு உரிய நியமனங்கள் துரிதமாக வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

348/2020

கௌரவ ஹர்ஷ த சில்வா,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சட்டரீதியான தன்மை யாதாக இருப்பினும் கூருணர்வுடைய சூழல் முறைமையொன்றில் வீதியொன்றை நிர்மாணிக்கும்போது சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினை ஆராய வேண்டும் என்பது சூழலியலாளர்கள் உட்பட பெரும்பான்மையான பொதுமக்களின் கருத்து என்பதால், அத்தகைய ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், கூருணர்வுடைய சூழல் முறைமையொன்றும் மற்றும் உலக உரிமையொன்றுமாகிய சிங்கராஜ வனத்தினூடாக லங்காகம எனும் கிராமத்திற்கு பாதையொன்று அமைப்பதற்காக அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றீர்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி (அ) இல் குறிப்பிட்டுள்ள கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

420/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அநேகமாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்ற "விசல் தம்புள்ள" நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படவுள்ள கலேவெல மற்றும் தம்புள்ளை பிரதேச செயலகப் பிரவுகளில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளின்பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படுவதில் உள்ளடக்கப்படாத பல கிராம அலுவலர் பிரிவுகள் கலேவெல மற்றும் தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகள் வழங்கப்படாத கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அக்கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அக்கிராமங்களுக்கும் குடிமனைகளுக்கான நீர் இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கென மாற்றுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

492/2020

கௌரவ நிரோஷன் பெரேரா :- வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு:-

(அ) புத்தளம் மாவட்டத்தில், வனாதவில்லுவ, எலுவன்குளம் பிரதேசத்தில் காடொன்று தீ வைக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக ஊடகத்தில் வெளியாகியமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அழிவு இடம்பெற்றுள்ள நலப்பரப்பின் அளவ யாது?

(ii) மேற்படி காணிகளின் உரிமை அரசாங்கம் வசமுள்ளதா?

(iii) இன்றேல் மேற்படி காமணிகளின் உரிமையினைக் கொண்டுள்ள தரப்பினர்கள் யார்?

(iv) மேற்படி காடு அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா?

(v) இந்நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

## 2020 நவம்பர் 26, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

50/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்சமயம் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப தற்சமயம் நிலவும் வெற்றிடங்கள் யாதென்பதையும்;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

123/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்கென இலங்கை முதலீட்டுச் சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அக்காணிகள் கையகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்காணிகளுக்காகச் செலுத்தப்பட்ட பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) அக்காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணிகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதும் அவற்றுக்கான விளைச்சல்களைப் பெறுகின்றதுமான நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

414/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது, விளக்கமறியல் இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், பொறுப்பேற்கும இல்லங்கள் மற்றும் தடுப்புக்காவல் இல்லங்கள் ஆகியவற்றில் நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக -

(i) சிறுவர் ஒருவரின் தங்கியிருக்கும் சராசரி காலப்பகுதியையும்;

(ii) சிறுவர் ஒருவருக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களின் வகுதிகள் மற்றும் அடிப்படைத் தகைமைகளையும்;

(iv) பணியாட்டொகுதியினர் – சிறுவர் விகிதத்தினையும்;

(v) சிறுவர்களை சமூகத்தினுள் மீள் ஒன்றிணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்;

(vi) இந்த சிறுவர்களின் நலன்களை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(vii) இந்த நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2015 முதல் 2019 வரையான காலப்பகுதி தொடர்பாக –

(i) மேலே தரப்பட்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் அனுமதி பெற்ற மற்றும் விலகிச் சென்ற;

(ii) விலகிச் சென்று வெற்றிகரமாகத் தொழில் பெற்று சமூகத்தில் பாதுகாப்பாக வாழுகின்ற;

சிறுவர்களின் எண்ணிக்கையை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

436/2020

கௌரவ சாந்த பண்டார,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணி இல்லாத மற்றும் இது வரையில் குடியிருக்கும் காணிக்கு உறுதி அற்ற பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இலங்கையில் உள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி குடும்பங்கள் வெவ்வேறாக அடையாளங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) குடியிருக்கும் காணிக்கு உறுதியில்லாத குடும்பங்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) குடியிருப்பதற்கு காணி இல்லாத குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் அதற்கான காணிகள் அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

481/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் வனாதவில்லு, பழைய எழுவாங்குளம் பிரதேசத்தில் நீண்டகாலமாக அகழ்வு அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத மணல் அகழ்வு வியாபாரம் இடம்பெற்று வருவதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சட்டவிரோத மணல் அகழ்வு வியாபாராத்தைத் தடுப்பதற்கு அமைச்சினால் —

(i) இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

507/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் அரசியல் அடிப்படையில் சமுர்த்தி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக தகைமை பெற்ற பெருமளவிலானவர்களுக்கு மேற்படி உதவித்தொகை கிடைக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) "சுபீட்சத்திற்கான நோக்கு" கொள்கை பிரகடனத்தின் படி சமுர்த்தி உதவித் தொகை கிடைக்கப் பெறாதவர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(v) சமுர்த்தி உதவித் தொகையின் பெறுமதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எவ்வித பதவியுயர்வும் கிடைக்கவில்லையென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பதவியுயர்வுகளை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் சமுர்த்தி திட்டத்தினதும் சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சரவை பத்திரங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) இற்றைவரையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

524/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

(iii) இன்றளவில் பதில் கடமையாற்றும் அதிபர்களை கொண்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

732/ '20

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடுகளுக்கிடையே பொருட்களை விற்பனை செய்வதற்கு இலகுமான முறை "ஈ – வர்த்தகம்" (E—Commerce) இணையத்தளமூடான விற்பனையாக இருப்பதனால், அதற்காக சுமார் 305 மில்லியன் அளவிலான உலக மக்கள் "பே பேல்" (Pay Pal) மற்றும் "கேட்வே" (Gateway) என்பவற்றைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) இலங்கையின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு மேற்படி முறையினைப் பயன்படுத்த முடியுமென்பதையும்;

(iii) இலங்கை மத்திய வங்கியால் மேற்படி முறையானது இலங்கையில் ஆரம்பிக்கப்படாமையால் பொருட்கள் / சேவைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து, அந்நியச் செலாவணியை பெறக்கூடிய வருமான வழியானது தடைப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) இலங்கையில் காணப்படுகின்ற "இணையவழி" (online) முறைக்கமைய சேவைகளை வழங்கும் சிறுவனங்கள் வெளிநாட்டு முகவரிகளைப் பயன்படுத்தி "பே பேல்" (Pay Pal) கணக்குகளைத் தயார் செய்கின்றன என்பதையும்;

(v) இதன் காரணமாக இலங்கைக்கு கிடைக்கக் கூடிய பெருமளவு நிதியை தரகுப் பணமாக வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் உற்பத்திகள், சேவைகள் "இணையவழி" (online) முறைமைக்கமைய வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கையில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 நவம்பர் 27, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

20/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது சுகாதார கள உத்தியோகத்தர்களை நடுத்தர மட்டத்திலான தொழில்நுட்ப சேவையில் உள்ளீர்ப்பது தொடர்பில் 22/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ளது. என்பதையும்;

(ii) ஆயினும் சப்ரகமுவா மாகாண சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சப்ரகமுவா மாகாண பகிரங்க சேவைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மேற்படி சுற்றறிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்வதில்லை என்பதையும்;

(iii) இது தொடர்பிலான சப்ரகமுவா மாகாண ஆளுநரின் கட்டளையை, சப்ரகமுவா மாகாண பகிரங்க சேவைகள் ஆணைக்குழு கவனத்தில் கொள்ளவில்லை என்பதையும்

அவர்அறிவாரா?

(ஆ) சப்ரகமுவா மாகாண ஆளுநரின் கட்டளையை சப்ரகமுவா மாகாண பகிரங்க சேவைகள் ஆணைக்குழு இவ்விதம் மூன்று தடவைகளிலும் கவனத்தில் கொள்ளாமைக்கான காரணம் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சப்ரகமுவா மாகாண பொது சுகாதார கள உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைப் பணத்தொகை யாது;

(ii) எதிர்காலத்தில் குறிப்பிட்ட பணத்தொகையை செலுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

110/2020

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பல மூலிகைத் தாவரங்கள் உள்ளன என்பதையும்;

(ii) சில தாவரங்களில் காணப்படுகின்ற இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் மரபணு என்பவற்றுக்காக காப்புரிமைப் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) அதன் காரணமாக நாட்டுக்கு பாரிய பொருளாதார நட்டம் ஏற்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான மூலிகைத் தாவரங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இலங்கைக்குத் தனித்துவமான மூலிகைத் தாவரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றில் காப்புரிமை கொண்டுள்ள தாவரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) காப்புரிமை இல்லாத மூலிகைத் தாவரங்களுக்காக அந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) காப்புரிமை கொண்டுள்ள மூலிகைத் தாவரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற மருந்து வகைகளின் மூலம் அல்லது இதர உற்பத்திகளின் மூலம் வருடாந்தம் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்படுகின்ற அந்நியச் செலாவணி வருமானம் எவ்வளவு;

(ஈ) (i) காப்புரிமை கொண்டுள்ள தாவரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற மருந்து வகைகளை அல்லது ஏனைய உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு;

(ii) உற்பத்திகளுக்கான அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிப்பதற்கு;

எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

153/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 15, ஆவே மரியாள் வித்தியாலயத்தில் கத்தோலிக்க திருமறை மற்றும் கீழைத்தேய சங்கீதம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆரம்பநிலை பிரிவிலும் தலா ஒவ்வொரு ஆசிரியர் வெற்றிடம் நிலவுகின்றதென்பதையும்;

(ii) மழை நீர் வடிந்தோடுவதற்கான முறையான வடிகாலமைப்பொன்று இல்லாமை காரணமாக இவ்வித்தியாலயத்தின் சிறிய மைதானமானது மழை நீரால் முழ்குவதனால் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

225/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட செம்பின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி செம்பு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி செம்பினை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு செம்பினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

449/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூகத்தில் பெரும் கலந்துரையாடலுக்கு உள்ளான பெட்டிகலோ கெம்பஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தாபிக்கப்பட்ட திகதி;

(ii) அதற்காக பணம் செலவிட்ட ஆட்களினதும் நிறுவனங்களினதும் பெயர்கள்;

(iii) அதன் ஆளுகைச் சபையில் இருந்தவர்களின் பெயர்கள்;

(iv) மேற்படி நிறுவனத்தினால் நடத்தப்படவிருந்த பாடநெறிகளின் எண்ணிக்கை;

(v) அப்பாடநெறிகளின் பெயர்கள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நிறுவனத்தில் நடத்தப்படவிருந்த பாடநெறிகளுக்கு மத்தியில் ஷரிஆ சட்டம் பற்றிய பாடநெறியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி நிறுவனம் தொடர்பில் நடப்பு அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

452/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவ நகரில் நீண்ட காலமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வசித்து வருகின்ற வர்த்தகர்களின் காணிகள் மற்றும் மக்களின் காணிகளுக்கு உறுதிகள் கிடைக்காத காரணத்தினால் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதெனபதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

607/2020

கௌரவ கயந்த கருணாதிலக,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு வழங்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை பெறுவதற்கு விண்ணப்பித்து இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவை ரூ.2000.00 இலிருந்து ரூ 2500.00 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

(v) வெளிநாட்டு யாத்திரைகளுக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வேலைத்திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனை ஒருங்கிணைக்கின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

634/2020

கௌரவ ராஜபுத்திரன் இராசமாணிக்கம் சாணக்கியா,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டகளப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மண்டூர் பிரதேச நீர்த்தாங்கிக்குரிய நிர்மாணப் பணிகள் நீர் வழங்கல் சபைக்கு பணம் செலுத்தாமையினால் நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனின், மேற்படி நீர்த்தாங்கியினால் நீர் விநியோகிக்கப்படும் நான்கு பிரதான பிரிவுகளுக்கு ஏற்படும் சிரமங்கள் யாவை என்பதையும்;

(ii) நீரின்றி கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள, நீர் விநியோகத்தை பெற்றுக் கொடுப்பதற்கு குழாய்கள் பதிக்க வேண்டிய கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) இக்கிராமங்களில் நீரின்றி தவிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 நவம்பர் 28, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

66/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை புகையிரத போக்குவரத்து சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி புகையிரதப் பெட்டிகளில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நமது நாட்டில் புகையிரத பெட்டிகளை உற்பத்திசெய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

193/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக குடியிருக்கும் குடும்பங்களுக்குச் சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அறுதி உறுதிகளைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் அக்குடும்பங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் யாவையென்பதையும்;

(ii) காணி உரிமப்பத்திரங்களைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையும் அக்குடும்பங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் யாவையென்பதையும்;

(iii) உரிமப்பத்திரங்களுடன் கூடிய வயல் காணிகளின் அளவும் மேட்டுக் காணிகளின் அளவும் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துவரும் மக்களுக்கு அறுதி உறுதிகள் இதுவரை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) போரில் பாதிக்கப்பட்ட மேற்படி மக்களுக்கு உறுதிகள் வழங்கப்படாத காரணத்தினால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து அடகு மற்றும் கடன் வசதிகள் பெறுவது சிரமமாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு அறுதி உறுதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் அறுதி உறுதிகள் அல்லது உரிமப்பத்திரங்கள் இன்றி வசிக்கும் காணி உரித்துடைய குடும்பங்களின் எண்ணிக்கையும் மேற்படி குடும்பங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

350/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இது வரையில் காணப்படுகின்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி தொடக்கம் பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவி வரையிலும் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி தெடக்கம் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வரையிலான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளுக்காக அண்மைக் காலமாக காலவாய்ப்பான பதவியுயர்வு களை வழங்குகையில் பின்பற்றபட்ட முறையியல் யாது என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான பதவி உயர்வுகளை வழங்குகையில் குறித்த பதவிகளுக்காக இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக அண்மையில் காலவாய்ப்பான பதவியயர்வுகளை வழங்குகையில், குறித்த பதவிகளில் இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கையினை கவனத்தில் கொள்ளாது அதனை விஞ்சியதாக இரண்டரை வருட சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

(vi) பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி வரையில் காலவாய்ப்பான பதவியுயர்வு வழங்குகையில் மேற்படி (v) இல் கூறப்பட்ட முறையியலைப் பின்பற்றாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

426/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணியாற்றுகின்ற —

(i) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்;

(ii) சமுர்த்தி முகாமையாளர்கள்;

(iii) ஏனைய உத்தியோகத்தர்களின்;

எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் ஏராளமான வெற்றிடங்கள் காணப்படுவதை அவர் அறிவாரா?

(இ) (i) ஆமெனில், குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) அவை நிரப்பப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மற்றும் சமுர்த்தி இயக்கத்தின் சிக்கல்களைத் தீர்ப்பதாக "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கமானது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தை ஸ்தாபித்து சமுர்த்தி உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய உரித்துவத்தை உறுதிப்படுத்தியது என்பதையும்;

(iii) ஆனால் பெரும்பாலான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இதுவரையில் ஓய்வூதிய உரித்துவம் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(உ) (i) இவ்வாறு ஓய்வூதிய உரித்து கிடைக்கப்பெறாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய உரித்துவத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய உரித்து உறுதி செய்யப்படும் திகதி யாது?

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

437/2020

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் கல்வித் துறைக்கு அதிபர்களும் ஆசிரியர்களும் அளப்பரிய சேவையாற்றுகின்றார்கள் என்பதையும்;

(ii) அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளங்களில் முரண்பாடுகள் நிலவுகின்றன என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்துவதற்காக வருடாந்தம் செலவாகும் தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(ii) அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக கல்வி அமைச்சினால் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

479/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றுள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாலங்களின் எண்ணிக்கை;

(iii) இன்றளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள பாலங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள பாலங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

499/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள மகாவலி வலயங்களுக்கு உரித்தான கிராமங்களில் உரிமப் பத்திரம் இல்லாத காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளுக்கு உரிமப் பத்திரம் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) உரிமப் பத்திரம் இல்லாத காணிகளுக்கு உரிமப் பத்திரம் வழங்குவதற்கு அதற்காகப் பின்பற்றப்படவுள்ள முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தின் மகாவலி வயங்களுக்கு உரித்தான காணிகளுக்கு உரிமப் பத்திரம் பெற்றுக் கொடுக்காமை காரணமாக எழுந்துள்ள சிக்கலை தீர்த்துவைப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

639/2020

கௌரவ ரஊப் ஹகீம்,— வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் நிலப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு பூரத்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை;

(ii) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இதுவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் எண்ணிக்கை எத்தனை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) மேற்படி ஒவ்வொரு வனப் பிரதேசமும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட திகதி, அதில் உள்ளடங்கும் நிலப்பரப்பு மற்றும் தொடர்புடைய வரைபடங்கள் அனைத்தும் பற்றிய விபரங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்ட வாரியாக தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?